பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
19 09 2025 FRIDAY
7.15 PM

*__தலைப்புச் செய்திகள்__*

1. ***தேர்தல் ஆணையம் 474 கட்சிகளின் பதிவினை ரத்து செய்துள்ளது.***
2. பயங்கரவாதத்தை அதன் எல்லா நிலையிலும் எதிர்க்க வேண்டும் என்று உலக நாடுகளுக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.
3. அடுத்த கல்வியாண்டில் தமிழகத்தின் தூத்துக்குடியில் கேந்திரிய வித்யாலயா தொடங்கப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.
4. வெளிநாடுகளில் படிப்பு, வேலைவாய்ப்பு, தொழில் செய்வோர் டிஜிட்டல் முறையில் ஆவணங்களின் அனுமதியை பெற்றுக்கொள்ளலாம் என்று வெளியுறவுத்துறை அதிகாரி திரு விஜயகுமார் தெரிவித்துள்ளார்.
5. ஆசியகோப்பை கிரிக்கெட் போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா இன்று ஓமனை எதிர்கொள்கிறது.

__இனி விரிவான செய்திகள் ---__

*<<<<<<<<<>>>>>>>*

***தேர்தல் ஆணையம் 474 கட்சிகளின் பதிவினை ரத்து செய்துள்ளது.***
***ஆறு ஆண்டுகளுக்குள் ஒரு தேர்தலிலாவது போட்டியிட வேண்டும் என்ற நிபந்தனையை பூர்த்தி செய்யாததன் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.***

***கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 808 கட்சிகளின் பதிவு ரத்து செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.***

*<<<<<<<<<>>>>>>>*

பயங்கரவாதத்தை அதன் எல்லா நிலையிலும் எதிர்க்க வேண்டும் என்று உலக நாடுகளுக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், தீவிரவாதிகளுக்கும், பாகிஸ்தானுக்கும்

இடையேயான தொடர்பு உலகத்திற்கே தெரிந்த விஷயம் என்று கூறினார்.

நேபாளத்தில் திருமதி சுஷிலா கார்கி தலைமையிலான இடைக்கால அரசை இந்தியா வரவேற்பதாக கூறிய திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், பிரதமர் திரு நரேந்திர மோடி, அந்நாட்டு பிரதமருடன் தொலைபேசி மூலம் விவாதித்ததை சுட்டிக்காட்டினார்.

<<<<<<<<<>>>>>>>

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் அடுத்த கல்வியாண்டில் கேந்திரிய வித்யாலயா தொடங்கப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

தென்காசி மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக வந்த அவரிடம், தூத்துக்குடியில் கேந்திரிய வித்யாலயா பள்ளி தொடங்க வேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சர் ஏற்றுக்கொண்டதாக பிஜேபி மாவட்ட தலைவர் திரு சித்ராங்கதன் தெரிவித்துள்ளார்.

இதற்காக துறைமுக வளாகத்தில் எட்டு ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், கட்டடம் கட்டும் பணியை துறைமுக நிர்வாகம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<<<<<<>>>>>>>

வாக்காளர் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி விமர்சிப்பது தேவையற்றது என்று பிஜேபி மூத்த தலைவர் திரு. ரவிசங்கர் பிரசாத், மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

திரு. ரவிசங்கர் பிரசாத் இன்று பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசுகையில், முறைகேடுகளை தடுக்கும் நோக்கில் போலி வாக்காளர்களை நீக்கிய

நடவடிக்கையை திரு. ராகுல் காந்தி விமர்சித்ததை கண்டிப்பதாக தெரிவித்துள்ளார்.

உண்மைக்குப் புறம்பாக அவர் கருத்துக்களை தெரிவிப்பதாகவும் திரு. ரவிசங்கர் பிரசாத் கூறியுள்ளார்.

2023 சட்டமன்றத் தேர்தல் தொடர்பாக தற்போதைய தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமாரை, திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டுவது அர்த்தமற்றது என்றும், ஏனெனில் – அப்போது திரு. கியானேஷ் குமார் தேர்தல் ஆணையர் பதவியில் இல்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், திரு. ராகுல் காந்தி தன்னுடைய குறைகளை மறைப்பதற்காக தேர்தல் ஆணையத்தின் மீது பழி சுமத்துவதாக கூறியுள்ளார்.

தேர்தலில் தொடர்ந்து திரு. ராகுல் காந்தி தோல்விகளை சந்தித்து வருகிறார் என்றும் இதனை மறைப்பதற்காகவே தேர்தல் அமைப்புகள் மீது அவர் குற்றம் சுமத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு ஆதரவாக நாட்டு மக்கள் உள்ளனர் என்று கூறிய அவர், விவசாயிகள், பொதுமக்கள், ஏழை எளியோர் என அனைவரும் அவரை தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நாடு முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருப்பதாகவும் திரு. கிரண் ரிஜிஜு குறிப்பிட்டார்.

<<<<<<<<<>>>>>>>>

சீக்கிய மத குரு கோபிந்த் சிங்கின் ஆன்மிக குறிப்பேடுகள், எதிர்கால சந்ததியினருக்கு தைரியம், நேர்மை, நீதி மற்றும் சமூக நல்லிணக்கத்தை போதிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சீக்கிய பிரதிநிதிகள் இன்று தம்மை சந்தித்ததாக தெரிவித்துள்ளார்.

Jore Sahib மற்றும் Mata Sahib Kaur Ji நினைவுச் சின்னங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கான பரிந்துரைகளை தம்மிடம் வழங்கியதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

சீக்கிய வரலாற்றில் இந்த நினைவுச் சின்னங்கள். ஆன்மிக ரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<<<>>>>>>>

வெளிநாடுகளில் படிப்பு, வேலைவாய்ப்பு, தொழில் போன்றவற்றிற்கு தேவைப்படும் ஆவணங்களை டிஜிட்டல் முறையில் பதிவு செய்து உரிய அனுமதியை பெறுவது எளிதாக்கப்பட்டுள்ளதாக சென்னையில் உள்ள வெளியுறவு அமைச்சகத்தின் கிளைச் செயலக தலைமை அலுவலர் திரு. எஸ் விஜயகுமார் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், E-Sanad இணையதள சேவையின் மூலம், தனிநபர் பிறப்பு, கல்வி, திருமண நிலை, இறப்பு சான்றிதழ்கள் தொடர்பான ஆவணங்கள், தொழில் நிறுவனங்களின் ஆவணங்கள் ஆகியவற்றை பதிவேற்றம் செய்து கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

<<<<<<<<<>>>>>>>

நாட்டின் பாரம்பரிய மருத்துவ முறைகளை உலகிற்கு எடுத்துச் செல்லும் வகையில், 10-ஆவது ஆயுர்வேத தினம் வரும் செவ்வாய்க்கிழமை கோவாவில் நடைபெறுகிறது.

இதுகுறித்து இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்த ஆயுஷ் அமைச்சர் திரு. பிரதாப்ராவ் ஜாதவ், கோவாவில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத கல்வி நிறுவனத்தில் வெகுவிமரிசையாக நடைபெறும் இந்த விழா, உலக அரங்கில் இந்திய பாரம்பரிய மருத்துவ முறைகளை உயர்த்துவது, நாட்டின்

ஒவ்வொரு குடிமகனுக்கும் கிடைத்துள்ள பெருமை என்று கூறினார்.

இந்திய பாரம்பரிய மருத்துவத்தின் வளர்ச்சி, ஆரோக்கிய இந்தியா மற்றும் ஆரோக்கிய உலகம் என்ற கட்டமைப்பை வலுப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு முதல் ஆயுர்வேத தினம் செப்டம்பர் 23ஆம் தேதி கொண்டாடுவது என மத்திய அரசு முடிவு செய்துள்ளதையும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஆயுர்வேதா உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ முறைகளுக்கு அங்கீகாரம் கிடைக்க பல்வேறு முயற்சிகளை எடுத்து வருவதாகவும் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் கூறினார்.

<<<<<<<<<>>>>>>>

சர்வதேச விண்வெளி நிலையத்தில் வாழ்க்கை மிகவும் கடினமானதாக இருந்தது என்று இந்திய விண்வெளி வீரர் திரு சுபான்ஷு சுக்லா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், விண்வெளிப் பயணம் சவால்கள் நிறைந்ததாக இருந்த போதிலும், உடல் ரீதியிலான பல்வேறு பிரச்சினைகளை தாம் எதிர்கொண்டதாக கூறினார்.

<<<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசியகோப்பை கிரிக்கெட் போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா இன்று ஓமனை எதிர்கொள்கிறது.

அபுதாபியில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்க உள்ளது.

ஏற்கனவே, "A" பிரிவிலிருந்து இந்தியா, பாகிஸ்தானும், "B" பிரிவிலிருந்து இலங்கை, பங்களாதேஷும் Super – 4 சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

---------------

சீனா பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ***Sukand Kadam*** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், ***26-24, 21-9*** என்ற செட் கணக்கில், இந்தியாவின் ***Yogesh*** -ஐ வென்றார்.

***Naveen Sivakumar, Pramod Bhagad, Krishna Naagar*** மற்றும் ***Umesh Vikram Kumar*** ஆகியோரும் காலிறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் ***Pramod Bhagad - Sukand Kadam*** இணையும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

----------

உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ***Suraj Vashisht*** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார். குரேஷியாவின் ***Zagreb***-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ***60*** கிலோ எடைப்புரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் ***Moldovan*** -வின் ***Victor Ciobanu*** -ஐ வென்றார்.

-----------

***Pharaoh*** கோப்பைக்கான ஜிம்னாஸ்டிக் போட்டியில் இந்தியாவின் ***Siddhant Konde, Harsh*** மற்றும் ***Sameer*** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

***<<<<<<<<<END>>>>>>>***